# அறவழி
NONVIOLENCE

★ அறம்: 4 ★ மாத இதழ் ★ தை 1990 ★ பக்கம்: 4 ★ விலை: 3-00 ★ வழி: 29



**பொங்கல் வாழ்த்துக்கள்**

அறவழி வாசகர்கள், அன்பர்கள்,
நண்பர்கள், சகோதரர்கள் அனைவருக்கும்
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்

— புதிய சமுதாய வெளியீட்டகம் (என். எஸ். பி. சி.


# சூழலைப் பாதுகாப்பது மக்கள் அனைவரினதும் பொறுப்பு!

— பாப்பரசரின் செய்தி

*"உலகில் சாந்தியும் சமாதானமும் தோன்ற வாழ்க்கை விழுமியங்கள் பேணப்பட வேண்டும். அதனைப் பாரதூரமாகக் கருத்தில் கொள்வதன் மூலமே இன்று உலகினைக் கவலைக்குள்ளாக்கும் சுற்றுடல் அசுத்தமாகும் பிரச்சினையைத் தீர்க்க முடியும். சூழலைப் பாதுகாப்பது சமுதாயத்தில் வாழ்கின்ற அனைவரினதும் பாரிய பொறுப்பாகும்."*

இவ்வாறு பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் உலக மக்களுக்கான தமது உலக சமாதான செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பாப்பரசர் மேலும் தமது செய்தியில் குறிப்பிடுகையில்,

"இன்று சூழல் பிரச்சனை ஒவ்வொருவரினதும் பொறுப்பு ஆகும் அளவுக்கு அது மிகப் பெரிதாகியுள்ளது. பிரபஞ்சத்தில் ஓர் ஒழுக்க முறை இருக்கிறது. அது மதிக்கப்பட வேண்டும். எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி இந்த ஒழுங்கு பேணப்பட வேண்டும். சூழல் பிரச்சனை ஒரு ஒழுக்க நெறி சார்ந்த பிரச்சனை என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்"

"ஒவ்வொருவருக்கும் நல்ல சுகாதார சூழல் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையாளர்களின் கடப்பாடு, சிருஷ்டியாளரான இறைவனில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையில் இருந்து நேரடியாகப் பிறப்பதாகும். வாழ்க்கைக்கான மதிப்பும், மனிதர்களுக்கான மதிப்பும் ஏனைய படைப்புகளுக்கும் விஸ்தரிக்கப்படுகின்றது."

"இவை இறைவனைப் புகழ்வதற்கு மனிதனுடன் சேர அழைக்கப்படுகின்றன. இறைவனுடன் நாம் சாந்தியுடன் இருக்கும் போது, எல்லாப் படைப்புகள் மீதும் அந்த சாந்தியை ஏற்படுத்த நாம் எம்மை ஈடுபடுத்திக் கொள்ள முடியும்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## இந்து ஆலய வீதிகளில் மீன் விற்பனையா?

வட - கிழக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான இந்து ஆலயங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள் அரைவாசிக்கு மேற்பட்ட ஆலயங்களை அண்மித்திருக்கும் பகுதிகள் சைவ ஆகமப் பிரகாரம் திகழ்கின்றன.

ஆயினும், ஏனையவற்றின் "சூழல்களில்", இந்து சமயத்தினையும், ஆலயங்களையும் மாசுபடுத்தும் வகையில் மீன், விற்பனை அவ்வப்போது இடம் பெறுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

குடாநாட்டில் இருக்கக் கூடிய பல இந்து ஆலயங்களை அண்மித்த பகுதிகளில், மீன் வியாபாரம் மும்முரமாக இடம் பெறுவதை தடை செய்ய, ஆலயங்களின் நிர்வாகிகள் கவனம் எடுத்தல் வேண்டும்.

## ஆண்டவனை நம்புவோர்க்கான ஒலிபரப்புச் சேவை?

"எல்லாம் வல்ல இயேசுக் கிறீஸ்துநாதரின் வல்லமையையும் - புகழையும் ஒரே மனத்தாலும் - வாயாலும் ஜெபிப்போம்" எனும் குரல் சோவியத் ரஷ்யாவில் இருந்து ஒலிபரப்பாகும் மாஸ்கோ வானொலியில் ஒலித்தது.

சோவியத் ரஷ்யாவின் அரச அனுசரணையுடன் நடாத்தப்படுகின்ற "மாஸ்கோ வானொலி"யின் ஓர் புதிய நிகழ்ச்சியாக "ஆண்டவனை நம்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

## நூல் நிலையம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்

"நூல் நிலையம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்கிற நிலை இன்றைய காலத்தில் ஏற்பட்டு வருகிறது. அவ்வளவு தூரத்திற்கு மனிதனின் அத்தியாவசியமான தேவைகளில் நூல் நிலையங்களும் ஒன்றாகி விட்டது" என்று தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் திரு. பி. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

கைதடி நுணாவில் பகுதியில் அறவழி பொது நூலகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக் குழுச் செயலாளர் திரு. க ஜீவகதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பொதுநூலக வளவில் பயன்தரும் நல்மரங்கள் நாட்டும் வைபவமும் இடம் பெற்றது.

பொதுநூலக கட்டிடத்தில் அமைந்துள்ள மாதிரிச் சிறுவர் நூலகத்தை சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் திரு. த. நவரத்தினராசா திறந்து வைத்தார்.

கைதடி நவீல்ட் பாடசாலையின் துணை அதிபர் திரு.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரசாயனங்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்படவுள்ளது

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் நச்சு இரசாயனங்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்படவுள்ளது.

இத்தகைய நச்சு இரசாயனங்கள் நிரல்படுத்தப்படுவதுடன் இவற்றில் அதிகளவு அபாயத்தை விளைவிப்பவை இனங் காணப்பட்டு இதற்கென நியமிக்கப்படவுள்ள விசேட தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவொன்றின் இசைவின் பின்னர் மட்டுமே இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும்.

ஏனைய நாடுகளில் தடை செய்யப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட இரசாயனங்கள் தற்போது இலங்கைக்கு சுதந்திரமாக இறக்குமதியாகின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்பு நெஞ்சங்களே பொறுத்தருள்வீர்!

பத்திரிகை அச்சிடும் தாளின் விலை நாளாந்தம் அதிகரித்துக்கொண்டுபோகிறது. இவ் அதிகரிப்பு உங்கள் அபிமானமிக்க "அறவழி"யையும் பாதிக்கின்றது. இருப்பினும், எமது மார்கழி இதழில் குறிப்பிட்டவாறு பத்திரிகையின் விலையை அதிகரித்து எம் அபிமானமிக்க வாசகர்களுக்கு மேலதிக செலவையும் - சுமையையும் ஏற்படுத்திக் கொள்ள நாம விரும்பவில்லை.

அதன் பொருட்டு, பத்திகையின் விலை தொடர்ந்து மூன்று ரூபாவாகவே இருந்துவரும். அதேவேளையில் பத்திரிகையின் பக்கங்களில் சிறுமாற்றத்தினைத் தவிர்க்க முடியாமல் செய்து கொள்கின்றோம் என்பதை எம் அன்பு நெஞ்சங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். தயவுசெய்து நிலைமையைக் கருத்தில்கொண்டு பொறுத்தருள்வீர்!

— நிர்வாகி

# "அறவழிப் போராட்டக் குழுவின் பணிகள் பாராட்டத்தக்கவை!"

"தமிழ் சமுதாயத்தின் நன்மை கருதி அறவழிப் போராட்டக் குழுவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பணிகள் பாராட்டத்தக்கவைகள். இக் குழு கடந்த பத்து வருடங்களாக எமது மண்ணில் மக்கள் நலன்பேணும் திட்டங்களைச் செவ்வனவே ஆற்றி வருவதை அறியும் போது மகிழ்ச்சியடைகின்றேன்"

இவ்வாறு சாவகச்சேரி மக்கள் வங்கியின் முகாமையாளர் திருமிகு. எஸ். தர்மநாயகம், அறவழி பணியகத்தில் கடந்த மாதம் 23-ம் திகதி நடைபெற்ற விதவைகள் உதவித் திட்டம் வழங்கும் வைபத்தில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

குழுவின் செயலாளர் திருமிகு. க. ஜீவகதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், இருபத்தைந்து விதவைகளுக்கு அறக் கொடைத் திட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

விதவைகள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் இதுவரை நூற்றுக்கு மேலானவர்களுக்கு அறக்கொடைத் திட்டச் சான்றிதழ்கள் குழுவினால் வழங்கப்பட்டிருப்பமை குறிப்பிடத்தக்கதாகும்.

செல்வி. வீரசிங்கம் தர்மினி நன்றியுரை கூறினார்.

# நாட்டிய மரத்தை பாதுகாப்போம்!

மரங்களை நட்டுவிட்டு மறந்து விடுவதால் பலனில்லை. மரக்கன்றுகளைத் தொடர்ந்து பாதுகாக்கவும் வேண்டும். மரம் நடுவோர் மட்டுமல்ல இலங்கை மக்கள் அத்தனைபேரும் இந்த உண்மையை உணர்ந்து கொள்ள வைக்க வேண்டும்.

மரங்கள் எமது கலாசாரத்தோடு இணைந்தவை. இலங்கையின் பிரதான மதங்களான பௌத்தமும் சைவமும் மரங்களுக்குத் தனி இடம் வழங்குகின்றன. புத்தர் பிரான் வெள்ளரசு மரத்தின் கீழ் ஞானம் பெற்ருர். இந்துமதக் கோவில்கள் ஒவ்வொன்றுக்கும் தலவிருட்சங்கள் உள்ளன. வில்வம் இலைகளும் நெல்லி இலைகளும் பூசைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தாமரையையும் மல்லிகை முல்லை மலர்ந்த ரோஜாப் பூக்களையும் பூசைக்கு வைக்கிருர்கள் பௌத்தர்களும் இந்துக்களும்.

இந்துமதக் கோவில்களுக்கு தோட்டம் ஓர் அங்கம். தோட்டமில்லாத கோவிலுக்கு அழகு இல்லை. கோவிலுக்கருகில் வளர்க்க வேண்டிய பூமரங்களை இந்துமதம் பட்டியலிட்டுக் கொடுத்துள்ளது. அதைப்போன்றே, கோவில் சுற்ருடலில் வளர்க்கத்தக்க மற்ற மரங்களின் பெயர்களையும் கொடுத்துள்ளது.

கோவில்கள் மட்டுமல்ல, மன்னர்களும் மாளிகைக்கு அருகில் பூங்காக்களை நிறுவியுள்ளனர். காடுகளைப் பாதுகாப்பதற்கும் அவர்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

எனவே, மரங்களை நாட்டுவதும் பாதுகாப்பதும் இலங்கை மக்களின் கலாசாரத்தின் ஓர் அம்சம். இந்தப் பாரம்பரியத்தை உபயோகிக்கத் தவறியதன் விளைவாகவே நாட்டும் மரங்களில் பெரும்பாலானவை செத்து விடுகின்றன.

மரக்கன்றுகளை நாட்டுவதல்ல முக்கியம். அவைகளைப் பாதுகாக்க வேண்டும்; பராமரிக்க வேண்டும். நாட்டிய மரங்களுக்குப் பசளை இட மறந்து விடுகின்ருேம் நாம். பசளை என்றதும் விலைமிக்க இரசானயப் பசளையைப் பற்றியே எண்ணிவிடுகின்ருேம். 'கொம்போஸ்ட்' பசளைதான் மிகச் சிறந்தது.

கொம்போஸ்ட் பசளையை வீட்டிலேயே தயாரிக்கலாம். வீட்டில் கூட்டுகின்ற குப்பை கூளங்களை எரிக்கவேண்டாம். ஒரு கிடங்கை வெட்டி குப்பைகளை அதற்குள் கொட்டுங்கள். அதன்மீது மண்ணும் சாணமும் கலந்து ஒரு படையாகப் பரவுங்கள். மீண்டும் குப்பை, குழைகள், புல்லு வேண்டியவைகளைக்கொண்ட படை இப்படியே படையாகப் போட்டு ஒழுங்காகத் தண்ணீர் விடுக. அடிக்கடி கிளறிவிடுதல் வேண்டும்; காற்றுப் புகத்தக்க வகையில்.

பன்னிரெண்டாவது தினத்தில் முழுவதையும் மண்ணால் அல்லது பொலித்தீனால் அல்லது கிடுகால் மூடிவைக்குக. எதுவித செலவுமின்றி 21ஆவது நாளில் உங்களுக்கு நல்ல பசளை கிடைக்கும். இதை நீங்கள் வளர்க்கும் தாவரங்களுக்கு இடலாம். நீங்கள் பசளையிட விரும்பும் தாவரத்தைச் சுற்றியுள்ள மண்ணைக் கிளறி பசளையை அதனுடன் கலந்துவிடவும்.

மரங்களை நாட்டும்போதும் சில விடயங்களைக் கவனிக்க வேண்டும். முதலில் 20 மீற்றர் ஆழமும் 10 மீற்றர் அகலமுமுள்ள குழிகளைத் தோண்டுங்கள். தோண்டும் போது மேற்பகுதியிலுள்ள மண்ணை எடுத்து அருகே வையுங்கள். அது பசளை மண். அடியில் இருக்கும் மண்ணுடன் கொம்போஸ்ட் பசளையைக் கலந்து குழியின் அடியில் இடுங்கள்.

மரக்கன்றை நாட்டிவிட்டு பக்கத்தில் பத்திரமாக எடுத்து வைத்த மண்ணைப் போட்டுக் குழியை நிரப்புக.

இன்னும் இரண்டு குறிப்புக்கள் : மழைகாலத்தில் மரங்களை நடுக. மாலை நேரமே மரம் நட உகந்தது. நட்ட அரைமணி நேரத்தின் பின்பு நீரூற்றுக.

மரங்களை நடும்போது அந்தந்த சீதோஷ்ண நிலைக்கு உகந்த மரங்களையே தெரிவு செய்ய வேண்டும். வேப்பம் மரம் இலங்கையிலுள்ள எல்லாச் சீதோஷ்ண நிலைகளுக்கும் ஏற்றது.

நன்றி இலங்கை சூழல் காங்கிரஸ்

## அறவழி

நிர்வாகம்
புதிய சமுதாய வெளியீட்டகம்
த. பெ. இல :2
சாவகச்சேரி
ஆசிரியர்
க. ஜீவகதாஸ்
இணையாசிரியர்
என். கே. துரைசிங்கம்

இம்மாதம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ள தபால் கட்டணத்தை அடிப்படையாகக் கொண்டு "அறவழி"யின் சந்தாத் தொகையில் சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை உள்நாட்டு / வெளிநாட்டு சந்தாக்காரர்களின் மேலான கவனத்துக்கு அறிவிக்க விரும்புகின்றோம்.

அறவழிக்கான உங்களின் சந்தாப் பணத்தை உடன் அனுப்பி உதவும் வண்ணம் தயவாய் வேண்டுகின்றோம்.

புதிய சந்தா விபரம் இதோ :

- தனிப்பிரதி ரூபா 3.00
- உள்நாடு ரூபா 50.00 (தபாலில்)
- இந்தியா ரூபா 120. (தபாலில்)
- மத்தியகிழக்கு ரூபா 130 (தபாலில்)
- ஐரோப்பா ரூபா 160. (தபாலில்)
- அமெரிக்கா, கனடா ரூபா 190 (தபாலில்)

சந்தாப்பணத்தை காசோலையாகவோ அல்லது காசுக் கட்டளையாகவோ அனுப்பிவைக்கவும்.

— நிர்வாகி —

## "நானோர் மனிதன்"

வணக்கம்.
வந்தனம். .
நானோர் மனிதன் !
நானோர் மனிதன் ! !
ஆணவம், கன்மம், அழிவுறும் மாயை .....
அத்தனையும் எனக்கு வேண்டாம்.
நானோர் மனிதன் ......
நானும் இந்தப் பூமியின் மனிதன்.
வேண்டும் !
வேண்டும் ! !
விடுதலை வேண்டும் !
சுதந்திரம் வேண்டும் ! !
சாக்கிலே கசங்கி,
சேற்றிலே முடங்கும் பூவின் வாழ்க்கை - அல்ல
தூக்கிலே தொங்கி - சுதந்திர (ச்)
சாற்றிலே கலக்கும் விடுதலை போதும் .....
வேண்டும் !
வேண்டும் ! !
விடுதலை வேண்டும் !
சுதந்திரம் வேணடும் ! !
பரம்பரைக் குடியின்,
பாரம்பரிய,
சுரண்டலிலிருந்து விடுதலை வேண்டும் ... _
பாதியில் வந்த,
பட்டய ஆட்சியில்; சுதந்திரம் வேண்டும் ...
வேண்டும் !
வேண்டும் ! !
உண்மையெங்குமாய் வேண்டும் !
நீதியே செயலாய் வேண்டும் ! !
அமைதியாய் உறங்க வேண்டும் ! ! !
நானோர் மனிதன்.
நானோர் மனிதன் . .

– ஜொனி (சிங்கைநகர்)
கொல்ரப்றோ'
டென்மார்க்

## அருள் விருந்து

- ஆசையைக் குறைத்தவனுக்குப்பணம் தேவையில்லை.
- பிறரை வாழ வைப்பதே பெரிய அறமாகும்.
- பிரார்த்தனை பண்ணுகிற வாய் புனிதமானது.
- நல்லொழுக்கமே நமக்கு உற்ற துணையாகும்.
- பொறுமையோடு பாடு பட்டால் நல்லகாலம் பிறக்கும்.
- கோழைகள் நீதி நியாயங்களை நினைப்பதில்லை.
- முயற்சி பண்ணுதல் மனிதனின் கடமை.
- மறத்தலும் மன்னித்தலும் மனிதப்பண்பாக வேண்டும்.

— தொகுப்பு: டயாஞ —



# மழலைப் பூக்கள்



அன்பிற்கினிய என்னருமைச் சிறார்களே!

இராஜி அக்காவின் புத்தாண்டு வாழ்த்துக்கள். 1989ம் ஆண்டு முடிவடைந்து 1990ம் ஆண்டு புத்தாண்டாக மலர்ந்துள்ளது. கடந்த காலங்களில் நாம் என்ன நல்ல செயல்களைப் புரிந்தோம். என்ன தீயசெயல்களைச் செய்தோம் எனச்சீர் தூக்கிப் பார்த்து தீயவைகளை மறந்து நல்லவைகளைச் செய்யத்தூண்டிய சக்திகளுக்கு நன்றி கூறுவோமாக.

1989 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12-ந் திகதி எங்கள் அறவழி நல்லொழுக்கச் சிறுவர் கழகத்தின் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த இருபது அறவழி நல்லொழுக்கச் சிறுவர் கழகங்களில் இருந்து நாற்பது சிறுவர்கள் நல்லொழுக்கப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டு பயன்பெற்று வருகிருர்கள். இப்பயிற்சி நெறி அறவழிப் பணிமனையில் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்று வருகிறது.

உங்களுக்கான நல்ல செயல்களில் முடிந்த ஆண்டில் 25 - 12 - 89 இல் கைதடி நுணாவில் கிராமத்தில் மாதிரிச்சிறுவர் நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. நல்லொழுக்கப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ளும் அனைவரும் அறவழி ஆரம்பித்த மழலைகள் பொது அறிவுப் போட்டியில் கலந்து கொண்டமை மகிழ்ச்சிக்குரியதே. இப்போட்டியில் ஏராளமான தம்பி தங்கைகள் கலந்துள்ளார்கள் இப் போட்டிக்கான விடைகள் பரிசீலனையில் உள்ளன. அடுத்த மாத அறவழிப் பத்திரிகையில் பரிசுபெறும் தம்பிதங்கைகளின் பெயர்கள் வெளிவரும்என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்ருேம்.

## உயிர்கள் இடத்தில் அன்பு வேண்டும்

தர்சி, மிகவும் நல்லவள் அவள்இரண்டு பூனைக்குட்டிகளை வளர்த்து வந்தாள். அவை இரண்டிற்கும் டாடா, என்றும், டீடீ, என்றும் செல்லமாக அழைப்பாள். தினமும் பால், சோறு எல்லாம் வைத்து அன்புடன், கவனத்துடன் செல்லமாக வளர்த்து வந்தாள். பாடசாலைக்குப்போனாலும், கடைக்குப்போனாலும் டாடா, டீடீ இரண்டும் அவளுடன் கூடவே செல்லும். டாவையும், டீடீயையும் தூக்கிவைத்து கொஞ்சுவாள், கூத்தாடுவாள். தனக்கென எது கொடுத்தாலும் அவைகளுக்குப்போட்டுத்தான் சாப்பிடுவாள், இதெல்லாம் தர்சியின் அம்மாவுக்கு பிடிப்பதே இல்லை. 'சனிபன்களே' என்று விரட்டி அடிப்பாள், ஒரு நாள் தர்சி, தூங்கிக் கொண்டு இருக்கும் போது கட்டிலுக்கு அருகில் இருந்த படுக்கையறை விளக்கு அவளுடைய போர்வையில் விழ அப்போர்வையில் தீப்பற்

(3 ஆம் பக்கம் பார்க்க)

★ நல்ல நூல்கள் நல்ல நண்பர்களுக்குச் சமன் ★

# குறிப்பறியும் திறன் வேண்டும் —

குடும்பத்திலுள்ளவர்கள் குடும்பத் தலைவனது குறிப் பறிந்து நடப்பது அவசியம்.

ஒரு குழுவில் உள்ளவர்கள் அந்தக் குழுவின் தலைவனது எண்ணமறிந்து ஒழுகுவது முக் கியம்.

ஒரு நாட்டுத் தலைவனிடம் பணிபுரிவோர், அவனது உள் ளத்தை உணர்ந்து செயல்படு வது மிகவும் இன்றியமையா தது.

வாய் திறந்து கொள்ளாமல் தான் புரிந்து கொண்டு நடக்க முடியும் என்ற வரையறைக்கு ஆட்படக்கூடாது.

தலைமை தாங்குவோர் வாய் திறந்து பேசவேண்டிய அவசியமில்லை. இதர நிலை களாலும் யூகித்து அறிந்து கொள்ளவேண்டும்.

மனோதத்துவம் :

இந்த மனோதத்துவம் தான் நம் வாழ்வு வளம் பெறுவ தற்கு அடிப்படை .

**வித்வான் வே. லட்சுமணன்**

நாம் கஷ்டங்களைச் சந்திப் பதற்குக் காரணம், நம்மிடத் தில் மனோதத்துவ அறிவு குறைவாக இருப்பது ஆகும்.

பிறரது உள்ளத்தைப் புரிந்து கொள்வதால், அவர்களிடம் நாம் நடக்க வேண்டிய முறையை அறிந்து கொண்டு விடலாம். பின்னர் அதன்படி நடந்தால் அவர்களால் தொல்லை விளைய இடமி ராது.

எப்போதுமே நாம் கஷ்டப் படுவதற்குக் காரணம் நம் பலவீனம் தான் என்பதை உணர வேண்டும்.

பலவீனங்களில் முக்கியமா னது மற்றவரின் மனப்போக் கைப் புரிந்து கொள்ளாமல் நடப்பது.

அந்த "மற்றவர்" சாதார ணமானவராக இருந்தால் கேடு இராமல் போகலாம். அவர் பெரும் புள்ளியாகவோ, நமக்கு மேற்பட்டவராகவோ, நமது அதிகாரியாகவோ, நம் தலைவராகவோ இருந்தால், அவரின் மனக்குறிப்பை அறி யாமல் நாம் நடப்போமா னால், நமக்குக் கஷ்டங்கள் வருவதற்குத் தடை இராது.

குறள் கூறுகிறது.

'ஒருவரது உள்ளத்தில் இருப் பதைத் தெளிவாக அறிபவன் எவனோ, அவன் தெய்வத் துக்கு நிகரானவன்' என்று கூறுகிறது.

அகத்தை முகம் பிரதிபலிப் பது இயற்கை.

மற்றவரின் உள்ளத்தை அறிவது எப்படி என்றால் — அதற்குத் தானே அவரது முகம் இருக்கிறது? அவரது அகத்தைத் தான் பார்க்க முடி யாதே தவிர — முகத்தைப் பார்த்துவிட முடியும் அல் லவா?

கண்களின் மூலம் அறிய லாம். இதழ்களின் அசைவிலி ருந்து அறியலாம். முகத்தில் படருகிற சாயல்களின் மூலம் அறியலாம். பலவிதமான வகைகளில் அக்குறிப்பு முகத் தில் பளிச்சிட்டு விடும். சட் டென்று உணர்ந்து கொண்டு விடவேண்டும்.

நமக்குக் குறிப்புணரும் சக்தி அவசியம். அவ்வாறே நம் துணையாக இருப்போரிடமும் அந்தச் சக்தி இருக்கிறதா என்பதை அறிந்து அவரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்

மற்றவரைக் குறிப்பால் அறிந்து, அந்தக் குறிப்புக்கு ஏற்றாப்போல் செயல்புரிந் தால் எல்லோரும் நமக்கு இனி யவராகி விடுவார்கள். அத னால் இன்னல் ஏற்படுவது தவிர்க்கப்படும்.

## முன்னேற்றம்

முன்னேற்றம் என்பது தனிமனிதனைத் தழுவியது; ஒரு குடும்பத்தைத் தழுவியது; சமுதாயத்தைத் தழுவியது; நாட்டைத் தழுவியது; உலகத்தைத் தழுவியது.

முன்னேற்றம் என்பது மொழியைத் தழுவியது; இலக் கியத்தைத் தழுவியது; நாகரிகம் தழுவியது.

முன்னேற்றம் என்பது தொழிலைத் தழுவியது; பொரு ளாதாரத்தைத் தழுவியது;

உயர்வு பெறவேண்டிய ஒவ்வொன்றையும் தழுவியது முன்னேற்றம்.

முன்னேற்றம் என்பது மனித வாழ்க்கையின் ஒருவித போராட்டம்.

தனி மனிதனாகட்டும். ஒரு பெரிய நாடாகட்டும். தன் னுடைய இன்றைய நிலையில் அதிருப்தி அடையவேண்டும். ஏன்? என்றால் அதிருப்தி தான் முன்னேற்றப் பாதையில் எடுத்து வைத்திருக்கும் முதல் அடியாகும்.

கட்டுப்பாடான உணர்ச்சி வயப்பட்ட முயற்சியே முன் னேற்றத்தின் உயிர்நாடி.

மனம், மொழி, மெய் வகையில் உண்மையான முயற்சி இல்லையேல் முன்னேற்றம் இல்லை,

ஒருவன் தற்பெருமை பேசிக்கொண்டு முன்னேற்றம் காணமுடியாது என்பது அனுபவ உண்மை.

முன்னேற்றம் என்பது இன்றைய இயக்கமாகவும் நாளைய நம்பிக்கையாகவும் இருந்து வருகின்றது.

எண்ணம் ஒரு மலர். மொழி அதன் மொட்டு. செயல் அதன் கனி. முன்னேற்றம் அதன் சுவை.

முன்னேற்றம் என்பது ஒரு முடமான பெண். அவள் தத்தித் தத்தி மெல்லவே வருவாள். அதுவே சீரான முன் னேற்றம்.

## மழலைப்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

றியது, ஐயய்யோ; தீ, தீ குழந்தை என தர்சியின் அம்மா அலறிக்கொண்டு ஓடினாள், தீ மிக வேகமாக பரவியது. டாடாவும், டீடீயும் பாய்ந்து ஓடின, போர்வையை வாயால் கௌவ்வி கீழே இழுத்துப் போட்டன. சிறியதீக்கயங்களுடன் டாடா டீடீயும் குழந்தையும் காப்பாற் றப்பட்டன. அம்மா ஓடி வந்து தண்ணீர்கொண்டு வந்து தீ யை அணைப்பதற்குள் டாடா வும் டீடீயும் தர்சியும் உயிர் தப்பி இருந்ததைக்கண்டு மிக வும் மகிழ்ச்சியடைந்தாள். பகுத்தறிவில்லாத மிருகம் — சனியன் என வர்ணிக்கப்பட்ட டாடாவும் டீடீயும் செய்த நன்றியை அம்மா கண்டு வியந்து ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

"லக்கி"

## நகைச்சுவை துணுக்குகள்

"கந்தையர்! நாலு மணிக்கூடுகளை கையில் கட்டி போகிறார்"
"அவரது மகன்கள் பிரான்ஸ், யேர்மன், சுவிஸ், கனடாவி லிருந்து தீபாவளிக்கென அனுப்பின மணிக்கூடுகளை கையில கட்டித் திரியிறார்"

* * *

"ஏன் இவரை 'வானொலி' எனப் புனைப் பெயரால் கூப்பிடுகிறீர்கள்"
"இவர் எப்போதும் தன்னைத் தானே புகழ்ந்து கொண்டிருப்பவராச்சே ..... அதனாலதான்"

* * *

நி இராஜம்புஷ்பவனம்

## வாழ்க்கை பற்றி இவர்கள்

- நமது வாழ்க்கை ஒரு திட்டமான நோக்கத்தையும், முக்கிய கருத்தையும் கொண்டிரா விட்டால் நமது சக்திகளெல்லாம் பற்பல வீண் எண்ணங் களால் சிதறிக்கப்படும்.
  — அந்தோனின் எமியூ
- வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள் அழிவு இல்லாத வாழ்க் கையை அறிந்து கொள்வதாகும்.
  — பென்
- நம்முடைய வாழ்க்கை என்பது ஓர் ஆறு. மரணம் என்னும் கடலில் சங்கமமாக அது ஓடிககொண்டிருக்கிறது.
  — ஜார்ஜ்மன்ரிக்
- வெறுமனே வாழ்வது அவசியமில்லை. அதற்கப்பாலும் முன்னேறி நம் பெயரைத் துலங்கச் செய்ய வேண்டும். இது அவசியம்.
  — ஜி. டி. அனஸ்ஸியோ
- ஒரு நொடிப் பொழுதாவது மிக உயர்ந்த செயலுக்குத் தன் வாழ்வைப் பயன்படுத்தியவன் எவனோ அவனே உண்மையில் வாழ்வின் பயனைக் கண்டவன் ஆவான்.
  — பாகவதம்
- ஓர் இலையின் மேலுள்ள பனித்துளி போல உனது வாழ்க்கை காலத்தின் விளிம்புகளில் நடனமாடிக் கொண்டிருக்கட்டும்.
  — கவிஞர் தாகூர்
- எல்லாக் கலைகளையும் விட வாழ்வுக் கலை ஒன்றே மிகப் பெரியது.
  — ஞானியார்

தொகுப்பு : கேஜே

## சட்டம்

சட்டம் என்பது உண்மை யைக் காண்பதற்கும், உண் மையைக் காப்பதற்கும், உண் மையை நிலைநிறுத்துவதற் கும் துணை செய்வதாக இருக்க வேண்டும்.

பத்துக் குற்றவாளிகள் தப் பித்துக்கொண்டாலும் பரவா யில்லை, ஆனால் ஒரே ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்ப ட்க்கூடாது. இதுதான் சட்டத் தின் அடிப்படை,

ஒரு சமூகத்தில் அதிகமான சட்ட திட்டங்கள் இருப்பது, அதன் அழிவுக்கு ஓர் அறிகுறி.

சட்டத்தால் மனித சமுதா யத்தைத் திருத்திவிட முடி யாது.

சட்டம் என்பது என்ன? தனி மனிதன் ஒருவன் தன் னுடைய மனத்தை அடக்கி ஆள விரதம் போன்றவற்றை மேற்கொள்வது போன்றதே.

ஒரு சமுதாயம் தன்மனம் போன போக்கில் போகாமல் ஒழுங்காகக் கட்டுப்படுவ தற்கு மேற்கொள்ளும் அரசி யல் நோன்பு தான் சட்டம் என்பது.

சட்டத்தைக் கண்டு அஞ்ச வேண்டியது ஒன்றும் இல்லை. தனிமனித நன்மைக்கு விரதம் உதவியாக இருப்பதுபோல, பொது நன்மைக்கு சட்டம் துணையாக இருக்கிறது.

மனித வாழ்வின் அடிப்ப யான நல்ல பண்புகளாகிய அன்பு, அருள், தொண்டு, நீதி முதலியவை வளர்ந்து விளங்க வேண்டுமானல் சட்டம் இருக்க வேண்டியதுதான். அதுதான் வெற்றி கொடுக்கக் கூடியது. வெறுமையான உபதேசம் வெற்றி கொடுக்காது.

ஒரு வண்டியின் சக்கரங்கள் சமமாகவும், சுலபமாகவும் ஓடு வதற்கு எண்ணெய் எவ்வளவு அவசியமோ. அவ்வளவு அவசி யம் மனித சமுதாய வாழ் விற்கு சட்டங்கள். □

## கை விளக்கு

தன் இரத்தத்தை
உறிஞ்சி ......
ஒளியாய்
எமக்கு
உமிழ்ந்து கொண்டு......
தான் மட்டும்
காலடியில்
இருட்டினை – இன்னமும்
வைத்துக் கொண்டு ......
விடியலுக்கு
தூதாக — தன்
கரும் புகையை
விடுகின்றது!

எமக்கு
இப்போதும்
ஒளிதான் – ஆனல்
விளக்கிற்கோ ......
விடியலின்
பின்புதான்!

த. கௌரிபாலன்

**பல தோல்விகளுக்குப் பிறகுதான் எவருக்கும் வெற்றி கிடைக்கிறது**

அறவழி
NONVIOLENCE

# சமுதாய மாற்றத்திற்காக அ. போ. குழு உழைக்கிறது

''சமுதாய மாற்ற மொன்றை காணும் முயற்சியில் அறவழிப் போராட்டக்குழு அயராது உழைத்து வருகிறது. இதற்காக முன்னெடுக்கப்பட்ட பல முயற்சிகள் எமக்கு வெற்றியை ஈட்டித்தந்துள்ளது'' இவ்வாறு அறவழிப் போராட்டக்குழு இயக்குனர் திரு. வீ. ஜீ. தங்கவேல் தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக்குழுவின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அறவழிப் பாலர் பாடசாலை ஆசிரியர்கள், பாலர் ஆசிரியர் பயிற்சியாளர்கள், சமுதாயத்திற்கும் நல்வாழ்விற்குமான பயிற்சியாளர்கள், அறவழி நல்லொழுக்க சிறுவர் பயிற்சியாளர்கள், பணிமனை ஊழியர்கள் அறவழித் தொண்டர்கள், இயக்குனர்கள் ஆகியோர் இந்த ஒன்று கூடலில் கலந்து கொண்டனர்.

திருமதி இராஜேஸ்வரி துரைராஜா, திரு.கே.கோபாலகிருஷ்ணன். திரு. சு. நடேசபிள்ளை, திரு ஏ. பேரம்பலம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஒன்று கூடலை ஆரம்பித்து வைத்தார்கள்.

செல்வி வீ. தர்மினி வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. தங்கவேலு மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது ''சமுதாய மேம்பாட்டிற்கும் அதன் வளர்ச்சிக்கும் எமது குழு ஆற்றி வரும் பணிகள் பல. ஒருமனிதனுடைய நலனை அவன் காப்பதற்கும் அவனிடையே மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணரவும் அவனுக்கு பாதைகள் தேவைப்படுகின்றன. அந்தப்பாதையாக அறவழிப் போராட்டக் குழு திகழ்ந்து வருகிறது.''

ஒன்று கூடல் ஆரம்பத்தில் ஒன்று கூடல் நோக்கவுரையை அறவழிப் போராட்டக்குழுச் செயலாளர் திரு.க ஜீவகதாஸ் நிகழ்த்தினார்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. திரு. என். கே. துரைசிங்கம் நன்றியுரை வழங்கினார்.

## சோபர் — ஸ்ரீலங்கா அங்குரார்ப்பணம்

நோர்வேயைத் தலைமையகமாகக் கொண்டிருக்கும் சர்வதேச நல்லொழுக்க ஸ்தானபத்தில் (IOGT) அங்கம் வகிக்கின்ற இலங்கை அமைப்புக்களை உள்ளடக்கியதாகிய ''சோபர் - ஸ்ரீலங்கா'' எனும் ஸ்தாபனத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் இம்மாதம் 7 ஆம் திகதி பண்டாரநாயக்கா நினைவு சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றது.

சர்வதேச நல்லொழுக்க ஸ்தாபனத்தின் தென்கிழக்காசிய பிராந்திய சபையினதும், ''போரூட்'' ஸ்தாபனத்தின் முயற்சியினாலும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

''அடிக்'' நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர். நந்தசேனா கொதா கொடவின் தலைமையில் நடைபெற்ற அங்குரார்பணக் கூட்டத்தில் சர்வோதய இயக்கத்தின் தலைவர் கலாநிதி. ஏ. ரீ. ஆரியரத்தினா, ''போரூட்'' வதிவிடப் பிரதிநிதி திரு. ஆரே எரிக்சன் உட்பட வேறும் பலர் பங்கு கொண்டிருந்தனர்.

இப் புதிய அமைப்பு - சகோதரத்துவம், சமாதானம், நல்லொழுக்கம் சார்ந்த பணிகளை முன்னெடுப்பதுடன், இலங்கை அமைப்புகள் மத்தியில் நெருக்கமான உறவுகளையும்-தொடர்புகளையும் வலுப்படுத்தவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

''சோபர் - ஸ்ரீலங்கா'' வின் தலைவராக திரு. டபிள்யூ. எம் ஏ. மகாதந்திலாவும். செயலாளராக திரு. சாந்திமா பத்மபெருமாவும், பொருளாளராக திரு. க.. ஜீவகதாசும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## இரசாயன...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றன. இதனால் பொதுமக்கள் கூடுதலாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

கிருமி நாசினிகள் / மருந்துப் பொருட்கள் கைத்தொழில் இரசாயனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பெரும்தொகையான நச்சு இரசாயனங்கள் இலங்கைக்கு இறக்குமதியாகின்றன. இவற்றில் கிருமி நாசினிகள், மருந்துப் பொருட்கள் ஆகியன மட்டுமே உத்தரவு பத்திர, பதிவு செய்தல் முறையைக் கொண்டிருக்கின்றன. ஏனைய இரசாயனங்களைப் பொறுத்த வரையில் எவ்வித கட்டுப்பாடும் இல்லை. அத்துடன் இந்த இரசாயனங்களின் முழுமையான நிரலை வழங்கும் நிலையொன்றில் எந்தவொரு அரசாங்க அதிகாரசபையும் இல்லை.

மத்திய சூழல் அதிகாரசபையினால் அண்மையில் முடிக்கப்பெற்ற ஆய்வொன்றில் நானூற்றுக்கு மேற்பட்ட இரசாயனங்களின் நிரலொன்று தொகுக்கப்பட்டது. இந்த இரசாயனங்களில் நூற்றி இருபத்தைந்திற்கு மேற்பட்டவைகளின் பொருத்தமான அடையாளம் தெரியவில்லை.

### பொது நூலகம்

அறவழிப் பொது நூலகத்தில் பாடசாலை மாணவர்களுக்கு தேவையான—பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் நன்நூல்கள் உடனுதவும் பகுதியில் இருக்கின்றன.

மாணவர்களின் நன்மை கருதி அவர்கள் நூலகத்திலிருந்து படிப்பதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### ஒன்றுகூடல்

அறவழிப் பாலர் பாடசாலை ஆசிரியர்கள், பயிற்சி ஆசிரியர்கள், இயக்குநர்கள், ஊழியர்கள் மற்றும் அறவழித் தொண்டர்களின் வருடாந்த ஒன்று கூடல் கைதடி நவீல்ட் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

## அறவழிச் செய்திகள்

### கண்காட்சி

அறவழிப் போராட்டக்குழுவின் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் பள்ளி முன் கல்வி ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சை வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் கண்காட்சி அடுத்த மாதம் 3-ம் திகதி கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

### ஊஞ்சல் திறப்பு

நுணாவில் மேற்கு — சாவகச்சேரியில் வசிக்கும் கதிர்காமசேகரம் கலாதேவி தம்பதிகள் அண்மையில் காலமான தமது புதல்வன் சக்தீஸ்வரன் (விக்ரம்) நினைவாக அம்பாள் அறவழி பாலர் பாடசாலை வளவில் இரு ஊஞ்சல்களை அமைத்துள்ளனர்.

அறவழிப் போராட்டக்குழு செயலாளர் திருமிகு க. ஜீவகதாஸ் இந்த ஊஞ்சல்களைத் திறந்து வைத்தார்.

### திரைநீக்கம்

ஊஞ்சல் திறந்து வைக்கப்பட்ட பின்னர் அம்பாள் அறவழிப் பாலர் பாடசாலை மண்டபத்தில் க. சக்தீஸ்வரன் (விக்ரம்) அவர்களின் உருவப் படத்தினை திருமதி இராஜேஸ்வரி துரைராஜா திரைநீக்கம் செய்து வைத்தார்.

### சிறுவர் பயிற்சி

அறவழி நல்லொழுக்க சிறுவர் கழக உறுப்பினர்களுக்கான பயிற்சிவகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் அறவழிப் பணிமனையில் நடைபெற்று வருகிறது.

பயிற்சி இணைப்பாளர் திருமதி ராஜி சண்முகநாதன் வகுப்புக்களை நடத்திவருகிறார்.

### தளபாடம் வழங்க நிதி உதவி

அறவழிப் போராட்டக்குழுவினால் மானாவளை கிராமத்தில் நடாத்தப்பட்டு வரும் அறவழி பாலர் பாடசாலைக்கு டென்மார்க்கில் வசிக்கும் திரு திருமதி. குநொஸ் யோகதாஸ் ரூபராணி தம்பதிகள் ரூபா 5000 பெறுமதியான தளபாடங்களை வழங்க நிதிஉதவி அளித்துள்ளனர்.

---

அறமுரசு

'' ஒவ்வொரு வருடமும் ஒரு தீய வழக்கத்தைக் களைந்து வந்தால் நாளடைவில் மிகவும் இழிவான மனிதன் கூட நல்லவனாகி விடுவான் '' — பிராங்கிளின்.

# அறநோக்கு

## தசாப்தமும — சகாப்தமும்

காலம் மிக வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. 1989 ஆம் ஆண்டுக்குப் பிரியாவிடை கொடுத்து விட்டோம். நம் வாழ்வில் ஒரு தசாப்தம் முடிவடைந்து விட்டது.

1990ஆம் ஆண்டு மலர்ந்துள்ளது. புதிய தசாப்தம் உருவாகி விட்டது. வாழ்வியலில் ஒரு கதவு மூடப்படும் போது - மற்றொரு கதவு திறக்கப்படுவது வழக்கமாகும்.

முடிவடைந்து விட்ட தசாப்தத்தில் நம் மக்கள் அனுபவித்த துன்பங்கள் இழப்புகள் - பிரிவுகள் - அழிவுகள் எண்ணில் அடங்கா.

காலமோ மாறிக்கொள்கின்றது. ஆயினும் நம் சமுதாயம் இன்னமும் மாறிக் கொள்ளவில்லை. நம் மூதாதையர்கள் எம்மை எந்த இடத்தில் விட்டுச் சென்றார்களோ - அதே இடத்தில் தான் - நாமும் ''புதியவர்கள்'' ''மாறிவிட்டவர்கள்'' என்ற நினைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

புதிய தசாப்தத்தில் - தமிழ் சமுதாயம் நிச்சயமாக ஒரு நல்ல மாற்றத்தினை ஏற்படுத்திக் கொண்டு புதியதோர் சகாப்தத்தினைச் சிருஷ்டித்துக் கொள்ள வேண்டும்.

சமுதாயம் இன்றிருக்கும் நிலை; நேற்றைய ஓட்டங்களின் விளைவு. சமுதாயத்தின் நாளைய நிலை. நாம் இன்று எடுக்கும் முடிவுகளையும், செயல்களையும் பொறுத்திருக்கிறது. ''ஏதோ நடப்பது நடக்கட்டும்'' என்று அசமந்தமாக மனிதர்கள் இருந்து விட்டால் சமுதாயம் மாற்றம் கண்டுவிட இயலாது.

உலகில் மாறுதல் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. மாறுதல்கள் மூலம் தான் சமுதாய வளர்ச்சியும், முன்னேற்றமும் நிகழ்கின்றன.

எனவே, புதிய தசாப்தத்தில் மக்கள் மத்தியில் - புதிய சகாப்தத்தினை உருவகப்படுத்தக் கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இந்தச் சமுதாயம் என்றுமே முன்னேறாது - திருந்தாது - திருத்த முடியாது என்ற உணர்வுகள் ஓங்கி வளர்ந்து விட்ட போதிலும் கூட, நல்லதொரு சகாப்தத்தினைத் திட்டமிட்டு, நம்பிக்கையுடன் உருவகப்படுத்த நம் முன் உள்ள வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

புதிய தசாப்தத்தில் வன்முறைகள் ஓய்ந்து, சமாதானமும் - சாந்தியும் நிலவி - மக்கள் இன்பமாகவும் - நிம்மதியாகவும் வாழ்கின்ற நிலை ஏற்பட வேண்டும் எனவும், அதன் மூலம், தமிழ் சமுதாயத்தில் ஒரு புதிய சகாப்தம் உருவாக வேண்டும் எனப் பிரார்த்திப்போமாக.

புதிய சகாப்தத்தினை முன்நோக்கியதாக நம் சிந்தனைகள் — செயல்கள் திகழட்டும்.

---

## நூல் நிலையம்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கே. கோபாலகிருஷ்ணன், திரு. சு. நடேசபிள்ளை அறவழிப் போராட்டக்குழு இயக்குனர் திரு. வீ. ஜி. தங்கவேல் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள்.

திரு. பி. சுந்தரம்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது; ஒரு மனிதனுக்குக் கண்கள் எவ்வளவு பிரதானமாக இருக்கிறதோ அதே போல் ஒரு கிராமத்திற்கு நூலகம் அவசியமாகும். பாடசாலை மாணவர்களுக்கு ஏற்ற நூல்களை தயார்படுத்திக் கொடுக்கும் பணியில் நூலகங்கள் ஈடுபடவேண்டும்.

## ஆண்டவனை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வோர்க்கான ஒலிபரப்பு'' அண்மையில் ஆரம்பமாகியுள்ளது.

இந்நிகழ்ச்சி ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது. ரஷ்யாவில் இருக்கும் கிறீஸ்தவர்களின் நலன்கருதியே இவ் ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, மாஸ்கோவின் அதிகாரபூர்வ செய்தி ஸ்தாபனமாகிய ''நொவொஸ்தி'' தெரிவித்துள்ளது.

சோவியத் ரஷ்யாவில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் சீர்திருத்த மாறுதலில் இதுவும் ஒன்றாகும் என அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

---

★ முடியுமெனக் கருதினால் எதுவும் முடியும் ★